மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com








# அலி சப்ரிக்கு புனர்வாழ்வளியுங்கள்



# ரணில் மிகப்பெரிய பயங்கரவாதி

துப்பாக்கியால் சுட முயன்றவனை நீதிபதியாக்கி, அச்சுறுத்தப்பட்டவரை குற்றவாளியாக்கும் நீதியே இலங்கையில் உள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது இதனை தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவர்கள் துப்பாக்கி முனையில்தான் அடக்கப்படுவார்கள் என்பதை மீளவும் ஒருமுறை சிங்கள ஆட்சியாளர்கள் நிரூபித்துள்ளனர் என்றார்.

பக்கம் 02



## கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு வெளிநாட்டு பயணத்தடை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு வெளிநாட்டு பயணத்தை தடை விதிக்கப்பட்டுள்ளதாக தனது டுவிட்டேர் பக்கத்தில் பதிவித்துள்ளார்.

மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகும் வரை அவருக்கு இத்தடையை விதிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை பரிசீலித்த கிளிநொச்சி நீதவான், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு வெளிநாட்டு பயணத்தை தடையை விதித்து உத்தரவிட்டுள்ளார்.



## புலிகளின் துப்பாக்கிகள் தென்மாகாணத்துக்குக் கொண்டுவரப்பட்டனவா?

பக்கம் 02



## தீர்க்கமான முடிவு இல்லை

இலங்கைத் தமிழரசு கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

குறித்த அரசியல் குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், பின்னர் கட்சித் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்களின் நீண்ட உரைகள் மட்டுமே இடம்பெற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பாராளுமன்ற

உரையிருப்பதாகத் தெரிவித்து கூட்டத்திலிருந்து வெளியேறினார். இதனை அடுத்து 12.30 அளவில் கூட்டம் நிறைவடைந்த போதும் தீர்க்கமான கலந்துரையாடல் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# காணாமல் போனவர்களுக்கு குறைந்தபட்ச நியாயம் கூட வழங்கப்படவில்லை



## யாழ்.மாவட்டத்தில் காணிகள் விடுவிப்பு

### கொழும்பில் முக்கிய கலந்துரையாடல்!

பக்கம் 02

உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு சம்பந்தமான ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள சட்ட மூல வரைவின் ஊடாக இலங்கையின் இறுதி போரின் போது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரியுள்ள குறைந்தபட்ச நீதியையோ, நியாயத்தையோ நிறைவேற்ற தவறியுள்ளதாக தமிழ்த் தேசியக்கூடடமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு சம்பந்தமாக அரசாங்கம் கொண்டு வரவுள்ள சட்டமூலம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பக்கம் 02

## ஜனாதிபதியாக வர எனக்கு தகுதிகள் இருக்கின்றன

பக்கம் 02

# தமிழ் அரசின் முன்னாள் எம்.பி. தோமஸ் வில்லியம் தங்கத்துரை காலமானார்!



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் தோமஸ் வில்லியம் தங்கத்துரை (வயது 79) காலமானார்.

அம்பாறை மாவட்டத்தின் பாண்டிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர், தமிழ் அரசுக் கட்சியின் நெடுங்கால செயற்பாட்டாளராகத் தன்னை நிலைநிறுத்தியதற்கு அப்பால், அம்பாறை மாவட்ட மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட சமூக சேவையாளராகவும் ஆரம்பத்தில் அறியப்பட்டவர்.

அரசியலில் அனுபவ முதிர்ச்சி பெற்ற இவர், அம்பாறை மாவட்ட மக்களின் பிரதிநிதியாக மிகக்குறுகிய காலம் (2009 - 2010) நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்திருந்தாலும், அந்தப் பதவிக் காலத்துக்கு முன்னரும், பின்னரும் மக்கள் நலன் சார்ந்தும், தமிழ்த் தேசியம் சார்ந்தும் நிறைவான பணிகளை ஆற்றியிருக்கின்றார்.

மருத்துவர் தோமஸ் வில்லியம் தங்கத்துரை தனது சீரிய சிந்தனை, நேர்த்தியான செயல் நோக்கு என்பவற்றின் அடிப்படையில் சமூக மதிப்பு மிக்க மனிதனாகவும், தன்னலம் கருதாத மக்கள் சேவகனாகவும் வாழ்ந்து மறைந்துள்ளார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் நாளை (07) பிற்பகல் 4 மணியளவில் பாண்டிருப்பில் இடம்பெறவுள்ளது.

## கிழக்கு மாகாணத்தில் மின்சாரம் இன்றி வசித்துவரும் 15 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம்

### பொறிமுறைகளை வழங்குமாறு மின்சாரசபை அதிகாரிகளுக்கு கிழக்கு ஆளுநர் பணிப்புரை

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாணத்தில் மின்சாரம் இன்றி வசித்துவரும் 15 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான பொறிமுறைகளை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சாரசபையின் கிழக்கு மாகாண பிரதி பொது முகாமையாளருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (6) ஆளுநருக்கும் கிழக்கு மாகாண மின்சார சபை பிரதி பொது முகாமையானர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் இடையே கலந்துரவயாடல் இடம்பெற்றது

இதன் போது காற்று மின்சாரம், சூரிய ஆற்றல், நீர் மின்சாரம் போன்ற புதுப்பிக்கதக்க ஆற்றல் வளங்களை கொண்ட முழுமையாக இயங்ககூடிய மின்சாரத்தை வழங்கும் இலங்கையில் முதல் மாகாணமாக கிழக்கு மாகாணத்தை மாற்றுவதற்கான ஆய்வினை மேற்கொண்டு அதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் அதேபோல கிழக்கில் 15 ம் ஆயிரம் குடும்பங்கள் மின்சாரம் இன்றி வாழ்ந்து வருவதாகவும் அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான பொறிமுறைகளை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## புலிகளின் துப்பாக்கிகள் ....

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்போது மனிதப் படுகொலைகளும் பாரதூரமான குற்றச்செயல்களும் இடம்பெற்றுவருவதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு, ஆளுங்கட்சி எம்.பியான சஞ்சீவ எதிரிமான்னவின் கேள்விக்குப் பதிலளித்தார்.

இதன்போதே, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்போது மனிதப் படுகொலைகளும் பாரதூரமான குற்றச்செயல்களும் இடம்பெற்றுவருவதை அவர் ஏற்றுக்கொண்டார். இந்த மனித படுகொலைகள், பாதூரமான குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொலிஸாரிடம் முறையான வேலைத்திட்டங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இக்குற்றச் செயல்களின் பின்னணியில் அநாவசியமான முறையிலான துப்பாக்கிப் பயன்பாடுகளும் உள்ளன.

நாட்டில் சிவில் யுத்தமொன்று இருந்தபோது அநாவசியமான துப்பாக்கிப் பயன்பாடுகள் இருந்தன. ஆனால், இப்போதும் இது தொடர்வது ஏன்? சட்டவிரோதமான முறையில் அஒ 47ஐ கூடப் பயன்படுத்துகிறார்கள்.

இது தொடர்பில் விசாரணைகள் ஏதுவும் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா? எனவும் சஞ்சீவ எதிரிமான்ன இதன்போது கேள்வி எழுப்பினார். யுத்தம் நிறைவடைந்தப் பின்னர் தென் மாகாணத்துக்குக் கொண்டு வரப்பட்ட துப்பாக்கிகளே இலங்கையில் பல இடங்களில் அதிகளவில் உள்ளன என பதிலளித்த அமைச்சர், இதற்கு மேலதிகமாக போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடத்தும்போது துப்பாக்கிளையும் கடல்வழியாக நாட்டுக்குள் கொண்டு வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

பண்டாரகமவில் 192 கிலோ கிராம் போதைப்பொருளுடன் 10 பிஸ்தோல்களும் கொண்டுவரப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், கடந்த 3 வருடங்களில் மாத்திரம் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் ஆயிரத்து 163 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதில் T56 மற்றும் 81 ரக துப்பாக்கிகளும் பிஸ்தோல்களும் உள்ளடங்கும் எனவும் தெரிவித்தார்.

## காணாமல் போனவர்களுக்கு ...

இறுதிக்கட்டப் போரின் போது பாதுகாப்பு தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என காணாமல் போனவர்களின் உறவினர்கள் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன் காணாமல் போனவர்களுக்காக அவர்கள் நியாயத்தை எதிர்பார்க்கின்றனர்.

யுத்தம் காரணமாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் 2 ஆயிரம் நாட்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கம் உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சம்பந்தமாக புதிய சட்டத்தை கொண்டு வர முயற்சித்தாலும் அது குறித்து கேட்டறிய வேண்டிய தரப்புடன் இதுவரை கலந்துரையாடவில்லை.

உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக அரசாங்கம் உருவாக்கியுள்ள சட்டமூல வரைவு குறித்து என்னிடம் கருத்து கேட்கப்பட்டது. எனினும் அதில் பொறுப்புக்கூறல் பற்றிய எந்த விடயங்களும் இல்லை.

கடந்த பல வருடங்களாக 15 ஆணைக்குழுக்களின் முன்னிலையில் போர் காரணமாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சாட்சியங்களை வழங்கியுள்ளனர்.

அந்த சாட்சியங்களின் அடிப்படையில் காணாமல் போனவர்கள் சம்பந்தமான செயலகம் விசாரணைகளை நடத்தியது.

இந்த ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றத்தையும் காணக்கிடைக்கவில்லை.

பரணகம ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்களை மீண்டும் மீண்டும் ஆணைக்குழுவிற்கு அழைப்பது மாத்திரமே நடந்தது எனவும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்.மாவட்டத்தில் காணிகள் ....

யாழ்ப்பாண மாவட்டத்தில் படையினர் வசமிருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில், ஜனாதிபதியின் செயற்குழுப் பிரதாணி சாகல ரத்நாயக்கா தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (06) நடைபெற்ற இக்கலந்துரையாடலில், காணிகளை விடுவிப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளக்கூடிய குழு ஒன்றினை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினரையும் பொலிஸாரையும் உள்ளடக்கிய குறித்த குழு குறுகிய காலப் பகுதிக்குள், அதிகபட்சமாக விடுவிக்கக் கூடிய காணிகளை அடையாளப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, வலி வடக்கு பிரதேசத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசுடமையாக்குவது தொடர்பாக வர்த்தமாணி வெளியிடப்பட்ட சுமார் 6000 ஏக்கர் காணிகளில சுமார் 3000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதால் குறித்த வர்த்தமானியை மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், காணி விடுவிப்பு தொடர்பான தெளிவூட்டல்களை மக்களுக்கு வழங்கி, மக்களின் ஒத்துழைப்புடன் காணிகளை விடுவிப்பதற்கு தேவையான காணி அளவீடுகளை மேற்கொள்வதற்கும், இன்னும் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து மீள்குடியேற்றுவதற்கும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கலந்துரையாடலில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியாக வர எனக்கு தகுதிகள் ...

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிக்கு வரும் தகுதிகள் தனக்கு இருப்பதாக ஐக்கிய குடியரசு கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றில் ஒளிப்பரப்பான பேட்டி நிகழ்ச்சியில் அவர் இதனை கூறியுள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடக்குமா, அதற்கு முன்னர் நடக்குமா, ஜனாதிபதி அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி அதனை செய்வாரா என்பது எமக்கு தெரியாது.

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் நாங்கள் அதற்கு தயார். பொதுத் தேர்தலுக்கு தயாராகவே இருக்கின்றோம்.

ஜனாதிபதியாக பதவிக்கு வருவது உங்களது எதிர்பார்ப்பா என அனைவரும் என்னிடம் கேட்கின்றனர்.

ஜனாதிபதியாக பதவிக்கு வருவதில் என்னிடம் இல்லாத தகுதிகள் என்ன என்று நான் கேட்கிறேன்.

நாங்கள் சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் என்பதா?, கொழும்பில் உள்ள பெரிய பாடசாலைகளில் கல்வி கற்கவில்லை என்பதா?, எமக்கு சர்வதேச அனுபவங்கள் இல்லை என்றா கூறுகின்றனர்?.

நான் சர்வதேச தளத்தில் உள்ள நிறுவனங்களில் பணியாற்றியுள்ளேன். நான் வியன்னா மாநாட்டின் தலைவராக பதவி வகித்துள்ளேன்.

நாட்டில் மிகப் பெரிய பல திட்டங்கள் எனது தலைமையில் வெற்றிகரமான முடிக்கப்பட்டன எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

## அலி சப்ரிக்கு புனர்வாழ்வளியுங்கள்

கஜேந்திரகுமார் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக்கூடாதென மருதங்கேணி பொலிசார் தாக்கல் செய்த அறிக்கையின்படி, கஜேந்திரகுமாருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

தன் இனத்திற்காக குரல் கொடுத்த மக்கள் பிரதிநிதி அச்சுறுத்தப்பட்டார். அவரை அச்சுறுத்த முயன்றவர்கள் கைது செய்யப்படாமல், அச்சுறுத்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதான் இந்த நாட்டின் நீதியா, சட்டமா என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியாமலுள்ளது.

இதுதான் கடந்த காலங்களிலும் இந்த மண்ணில் நடந்துள்ளது. மருதங்கேணி சம்பவத்தில், அச்சுறுத்தல் விடுத்த புலனாய்வாளர், பரீட்சை மண்டபத்தில் பாதுகாப்புக்கு நின்ற பொலிஸ்காரரின் துணையுடன் நிற்கிறார். அச்சுறுத்தப்பட்டவர்கள் பற்றி அரசும் அக்கறையின்றியுள்ளது.

குமார் பொன்னம்பலம் இந்த மண்ணில் சுட்டுக் கொல்லப்பட்டார். நீதி கிடைக்கவில்லை. ரவிராஜ், யோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். சுட்டவர்கள் பாராளுமன்றத்தில் உள்ளனர். அமைச்சர்களாக உள்ளனர். இணைத் தலைவர்களாக உள்ளனர். சுட்டவர்கள் தண்டிக்கப்படவில்லை. இந்த நாட்டில் நியாயம் பற்றி பேசுபவர்கள் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தப்படுகிறார்கள். வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி அண்மையில் மிரட்டும் பாணியில் பேசியுள்ளார். டயஸ்போராவுடன் இணைந்து மீண்டும் துப்பாக்கி கலாச்சாரத்தை ஏற்படுத்த முனைவதாக கூறியுள்ளார். அவர் மீண்டும் துப்பாக்கிகளை எடுப்போம் என மிரட்டுகிறார். நாங்கள் செய்வதை செய்வோம், நீங்கள் பொத்திக் கொண்டிருங்கள் என்பதுதான் இதனர்த்தம். அலிசப்ரி போன்றவர்களுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும். நீதி, இனநல்லிணக்கம் என்றால் என்னவென்பதை கற்பிக்க வேண்டும். இப்படியானவர்களுக்கு புனர்வாழ்வளித்தால்தான் துப்பாக்கியை எடுப்பது பற்றிய கதைகளை நிறுத்தலாம்.

அலி சப்ரி மீண்டும் ஒரு போரை விரும்புகிறாரா?

கஜேந்திரகுமாரை துப்பாக்கி முனையில் சுடலாமென இந்த அரசு நினைத்தால் அது மோசமான முன்னுதாரணம். அரச பயங்கரவாதத்தின் தெளிவான செய்தி.

தன்னை லிபரல்வாதியாக காட்டும் ஜனாதிபதி ரணில், மிகப்பெரிய பயங்கரவாதியாக, சர்வாதிகாரியாக இன்னொரு முகத்தை காட்ட முயன்றுள்ளார். இதன் இன்னொரு வடிவம்தான் கஜேந்திரகுமார் மீதான ஒடுக்குமுறை.

கஜேந்திரகுமார் வெளிநாட்டு பயணத்தடைக்குள்ளாகியுள்ளார். அவர் பயங்கரவாதியா? துப்பாக்கி வைத்திருந்தாரா? துப்பாக்கி வைத்திருந்தவன் ஓடிப்போய் நிற்கிறான். குற்றம்செய்தவனை தண்டிக்கவில்லை. இதுதான் இந்த நாட்டின் நீதியமைப்பு.

குற்றம்செய்தவனை நீதிபதியாக்குகிறீர்கள். யார் சுட்டானோ, வெட்டினானோ அவனை நீதிபதியாக்கி நீதி வழங்க முற்படுகிறீர்கள் என்றார்.

# வற்றாப்பளை ஆலயத்தில் பறவைக் காவடியில் வந்த பெண்கள்!











வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வைகாசி பொங்கல் விழா மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் பெரும் திரளான மக்கள் உப்புநீரில் விளக்கெரியும் எம்பிராட்டியின் அருளை பெறுவதற்காக குவிந்து வந்தனர்.

பாற்குடங்கள், காவடிகள் பாற்குடங்கள், ஆட்டக்காவடிகள், பறவைக்காவடிகள் என நேர்த்திக்கடன்களை அடியவர்கள் நிறைவேற்றிய காட்சி பார்ப்போரை கண்குளிரவைத்தது.

இந்நிலையில் பெண்களால் எடுக்கப்பட்ட தூக்கு காவடி பலரையும் மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

உள்நாட்டு போரின் பின்னர் பெண் ஒருவர் தொடர்ச்சியாக வற்றாப்பளை அம்மனுக்கு தூக்கு காவடி எடுத்து வரும் நிலையில், வேறு இரு பெண்களும் பறவைக்காவடி எடுத்துவந்து அன்னைக்கு தமது நேர்த்திக்கடனை செய்திருந்தமை வற்றாப்பளை கண்ணகை அம்மனின் பெருமையினை இன்னும் எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது.

## இலங்கை இந்தியா இடையிலான கப்பல் சேவை ஆரம்பம்!



பாண்டிச்சேரியில் இருந்து தென்னிந்தியாவின் காங்கேசன்துறைக்கு சரக்கு கப்பல் சேவையை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தொடங்குவதற்கு ஹேலிஸ் நிறுவனம் அனுமதி பெற்றுள்ளது.

அதன்படி, அந்த நிறுவனம் சரக்கு போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதுடன் மேலும் நான்கு நிறுவனங்கள் அனுமதி கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவில் காரைக்கால் மற்றும் காங்கேசன்துறைக்கு இடையேயான பயணிகள் போக்குவரத்து சேவையை கடந்த மே 15 முதல் தொடங்க திட்டமிடப்பட்டது.

எனினும், இந்த பயணிகள் கப்பல் சேவை தொடங்குவதற்கு மேலும் கால அவகாசம் வேண்டும் என இந்தியா கோரிக்கை விடுத்துள்ளதால், அதன் தொடக்கம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சரக்கு போக்குவரத்து எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## இராணுவத்தினர் வசமிருந்த காணி 32 வருடங்களுக்கு பின் கையளிப்பு !

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனையில் இராணுவத்தினர் வசமிருந்த தனியார் காணி 32 வருடங்களின் பின்னர் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிரான் பிரதேச செயலக பிரிவில் 8.6 ஏக்கர் காணி இன்று விடுவிக்கப்பட்டது.

இதற்கான நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், கிரான் பிரதேச செயலாளர், கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். 59 உரிமையாளர்களிடம் அவர்களின் காணிகள் இன்று கையளிக்கப்பட்டன.

இந்த காணிகளை 1991 ஆம் ஆண்டிலிருந்து இராணுவம் கையகப்படுத்தி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆலயத்திற்கு சென்று திரும்பிய இளைஞன் விபத்தில் உயிரிழப்பு..!

யாழ். வரணி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரொருவர் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சென்று பின்னர் வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் உள்ள தனது வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குடத்தனை பகுதியைச் சேர்ந்த நிறோஜன் என்ற 31 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரதே பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## வாதரவத்தை படுகொலை நினைவு







இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களை 33 ஆண்டுகளின் பின்னர் நினைவுகூறும் நிகழ்வு யாழ்ப்பாணம் புத்தூர் வாதரவத்தையில் இடம் பெற்றது.

1987 ஆம் ஆண்டு இதே நாளில் வாதரவத்தைப் பகுதியில் இந்தியஅமைதிப்படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இறந்த பொது மக்களை நினைவு கூறுவதில் கடந்த காலங்களில் அச்சமான சூழல் நிலவிவந்தது. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இளையகுட்டி பரஞ்சோதியின் தலைமையில் இறந்தவர்களின் உடைக்கப்பட்ட நினைவு தூபிக்கு அருகில் நினைவு கூரப்பட்டது.

அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட தேரம் பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள் மனைவி மற்றும் உறவினர்கள் ஆகியோரால் பொதுச்சுடர் மற்றும் நினைவுச் சுடர் ஏற்றி கண்ணீர் மல்க மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# கோர வாகன விபத்தில் கணவனும் மனைவியும் பலி



கட்டுநாயக்கவில் இருந்து திருகோணமலை நோக்கி சென்ற வேன் ஒன்றும் திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த சீமெந்து தூளை ஏற்றிய கொள்கலன் வண்டியும் கித்துல் உதுவ சிங்கப்புர பிரதேசத்தில் இன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் கொள்கலன் வண்டி புரண்டு விழுந்துள்ளதுடன் வேனுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் வேனில் பயணித்த கணவன்,மனைவி உயிரிழந்துள்ளனர். வேனில் பயணித்த ஒருவரும்,கொள்கலன் வண்டியின் சாரதியும் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவத்தில் படுகாயடைந்துள்ள ஒருவர் திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிண்ணியா பிரதேசத்தை சேர்ந்த 49 வயதான முஸ்தபா அலப்தீன், 45 வயதான முஸ்தலின் சுஹய்லா உம்மா ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

## யாழ் மக்களுக்கு இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவிப்பு

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தில் சனிக்கிழமைகளிலும் பணம் செலுத்தும் பகுதி பொதுமக்களின் நன்மை கருதி செயற்படும் என வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் பொறியியலாளர் செ.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் 10.06.2023 சனிக்கிழமை தொடக்கம் தினமும் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை பணம் செலுத்தும் பகுதி திறந்து இருக்கும் என பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவு கூட்டுப் படுகொலை; சந்தேக நபருக்கு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு

யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் இடம்பெற்ற 6 பேரின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அறுவரின் கொலை தொடர்பான வழக்கு இன்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, மூவரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த நிலையில், சந்தேகநபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டடார்.

இந்த வழக்கும் அன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி அதிகாலை நெடுந்தீவில் 5 பேர் வெட்டி கொலை செய்யப்பட்டனர். சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 101 வயது மூதாட்டியும் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர்களில் 4 பெண்களும் 2 ஆண்களும் அடங்குகின்றனர்.

## சம்பூரில் அதிகாலையில் திடீரென இடிந்து விழுந்த மதில்கள்



திருகோணமலை சம்பூர் பிரதேசத்திற்குள் செவ்வாய்கிழமை அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் சேதம் விளைவித்துள்ளன. இதன்போது வீடொன்றின் மதிலை உடைத்துள்ளதோடு பாதுகாப்பு வேலிக்கும் சேதம் விளைவித்துள்ளது.

மேலும் மரவெள்ளி,நிலக்கடலை, வாழை,தென்னை உள்ளிட்ட பயிர்களுக்கு சேதம் விளைவித்துள்ள காட்டு யானை அறுவடை செய்து சம்பூர் மைதானத்தில் உலர வைக்கப்பட்டிருந்த நெல்லினை சாப்பிட்டும் சென்றுள்ளதாக சம்பூர் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாக சம்பூர் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் காணப்படுவதாகவும் பயிர்களை சேதப்படுத்துவதோடு வீடுகளில் அச்சத்துடனே இருப்பதாகவும் சம்பூர் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இதுவிடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு யானை ஊருக்குள் உட்புகாமல் இருக்கவும்,யானை பாதுகாப்பு வேலி அமைத்துத்தர வேண்டுமெனவும் சம்பூர் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## முட்டாள்தனமான தலைவர்களின் அரசியலுக்காக பலிகடாவாக வேண்டாமே

உயர்தர / சாதாரணதரப் பரீட்சைகள் இடம்பெறும் காலத்தில் வினா, விடைத்தாள்களைச் சேகரித்து வைக்கும் மத்திய நிலையங்களிற்குப் பரீட்சை முடியும் வரை முழுமையான காவல் துறைக் கண்காணிப்பு வழங்கப்படுவது வழமையாகும்.

அவ்வாறான பரீட்சை மத்திய நிலைய வளாகங்களிற்குள் / அருகில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலுமே அனுமதியின்றி உட்பிரவேசிக்க / கூட்டம் கூட்ட முடியாது. (வினாத்தாள்களை மோசடி செய்ய முயன்றார்கள் என்ற கோணத்திலே பார்க்க முடியுமாக இருக்கும்) அதோடு பரீட்சை ஆரம்பித்த நாள் முதல் முடியும் நாள்வரை இது பரீட்சை நிலையம் என்ற சுவரொட்டி வாயிலில் காட்சிப்படுத்தப் பட்டிருக்கும்.

இவ்வாறான நிலையில் London இல் சட்டம் படித்த, மூன்றாம் தலைமுறைச் சட்டத்தரணியான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கவனக்குறைவாக இருந்தாரா அல்லது வாக்கு அரசியல் காரணங்களுக்காய் publicity stunt செய்யப்போய் மாட்டிக்கொண்டார்களா என்பது புரியவில்லை. அன்றைய தினம் பரீட்சை நிலையக் காவல் கடமையில் நின்ற பொலீசாரோடு முரண்பட்ட கட்சியின் உறுப்பினர்கள் சிலர் பிணை வழங்கப்பட முடியாத சட்ட ஏற்பாடுகளின் துணையுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமது ஆதரவாளர்களின் நலனில் அக்கறையற்ற, முட்டாள்தனமான தலைவர்களின் அரசியலுக்காய் ஆதரவாளர்கள் பலிக்கடாவாக வேண்டாமே என முகநூலில் நபர் ஒருவர் பதிவிட்டுள்ளார்.



தியாகி பொன் சிவகுமாரனின் 49 வது நினைவேந்தல் 05/06/2023 மாலை 4 மணிக்கு ரெலோ யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட அமைப்பாளர் தியாகராசா நிரோஷ் தலைமையில் பொதுச் சுடரினை ரெலோ இளைஞர் அணித் தலைவர் சபா குகதாஸ் ஏற்றி வைத்தார் அதனைத் தொடர்ந்து அக வணக்கம் இடமா பெற்றது பின்னர் ஏனைய உறுப்பினர்கள் மலர் அஞ்சலி செய்தனர் தியாகி சிவகுமாரனின் நினைவு தொடர்பாக சபா குகதாஸ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியுடன் கிழக்கு ஆளுநர் விசேட கலந்துரையாடல்!



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குமிடையிலான கலந்துரையாடல் கொழும்பில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சுற்றுலா, மீன்வளத்துறை, கனிம மணல் மற்றும் விவசாயம் போன்ற பல்வேறு துறைகளில் வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் நாடுகளின் நிபுணத்துவத்தை பெற்றுக்கொள்வது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ஆளுநரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று அதற்கு சாதகமான பதிலை வெளிவிவகார அமைச்சர் அளித்துள்ளார்.




அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |



